செய்தி வெளியீடு எண் :13 நாள் : 05.05.2020

**தேனி மாவட்டம்**
**கொரோனா வைரஸ் பாதுகாப்பு உதவிப் பொருட்களை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள்**
**மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார்.**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தவழும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா வைரஸ் பாதுகாப்பு உதவிப் பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் இன்று (05.05.2020) வழங்கி தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் (COVID – 19)தொற்று மேலும் பரவாமல் தடுக்கும் பொருட்டு மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசால் ஊரடங்கு அமல்படுத்தியுள்ள காலங்களில் மாற்றுத்திறனாளிகளைப் பாதுகாக்கும் வண்ணம் அவர்களின் அன்றாடத் தேவைகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைந்து வழங்கிடும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், குறிப்பாக தவழும் மாற்றுத்திறனாளிகளின் தனிப்பட்ட பாதுகாப்பினையும், சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டும், அவர்கள் வசிக்கும் இடங்களில் அவர்களே தங்களை பாதுகாத்துக் கொள்ள ஏதுவாகவும், கையுறைகள், முட்டியுறைகள் மற்றும் காலுறைகள் ஆகிய உதவி பொருட்களும், இதர அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் அவர்களை பாதுகாக்கும் வண்ணம் அவர்களுக்கு தேவையான முககவசம், கையுறைகள், கிருமிநாசினிகள், Tissue Paper Packet மற்றும் Cotton roll ஆகிய சிறப்பு உதவி பொருட்கள் அடங்கிய தொகுப்புகளும் முதற்கட்டமாக 500 நபர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

மேலும், இவ்வுதவி பொருட்கள், பயன்பாட்டிற்குப் பிறகும் சுத்தம் செய்து மீண்டும் அவர்கள் பயன்படுத்திடும் வகையில் வழங்கப்படுகிறது. மாவட்டங்களில் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள தவழும் மாற்றுத்திறனாளிகளுக்கும், இதர அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் மூலம் களப்பணியாளர்கள் வாயிலாக தவழும் மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் இடங்களுக்கே சென்று இவ்வுதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் க.சகுந்தலா, துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**